بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 7

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 42

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 - ரபீயுல்அவ்வல் 23 ★ அகா 20 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 20 அக்டோபர் 2022

## அல்லாஹ்வின் கட்டளை

قُلْ يٰۤاَيُّهَا النَّاسُ
اِنِّيْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعًا
الَّذِيْ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ
لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ يُحْيٖ وَيُمِيْتُ

**பொருள் :**

நீர் கூறுவீராக: மக்களே! நிச்சயமாக நான் உங்கள் எல்லாருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன். வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்குரியது. அவனையன்றி வணக்கத்திற்குரியது எதுவுமில்லை. அவன் உயிரை வழங்கவும், மரணத்தை அளிக்கவும் செய்கின்றான். (அல் அஃராஃப்:159)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அல்லாஹ் எமக்கு தெளிவுபடுத்தியுள்ள விஷயமே சரியானதும், உண்மையானதும் ஆகும். மஸீஹ் இரத்தம் சிந்தும் எந்த போரும் புரிய மாட்டார். அவர் வாளேந்தி போர் புரிவதும் அவரது பதவி கிடையாது என்ற இந்த விஷயம் ஹதீஸின் கருத்திற்கு பொருத்தமானதாகும்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

அவருக்கு இந்தப் பெயர் வைக்கப்பட்டதன் அடிப்படையின் கீழ் மஸீஹின் பணி என்ன?

மஸீஹ் இப்னு மர்யமின் பணி என்பது தீமையை ஒழிப்பதும், மஹ்தியின் பணி நன்மையை உருவாக்குவதும் ஆகும். மஸீஹின் பணி يَقْتُلُ الْخِنْزِيرَ يَكْسِرُ الصَّلِيبَ (பன்றியைக் கொல்வார், சிலுவையை முறிப்பார்) என்று கூறப்பட்டிருப்பதை சிந்தித்து பாருங்கள். இதுவே தீமையை ஒழிப்பது ஆகும். ஆயினும், அவர் தீமையை ஒழிப்பதற்காக வாள் ஏந்திக் கொண்டு போருக்காக புறப்பட்டு விடுவார் என்பது ஒருபோதும் எமது கொள்கை அல்ல.

அவர் போர் புரிவார் என்று ஆலிம்கள் கூறுகின்றனர். அது சரியல்ல. மாறாக அது முற்றிலும் தவறாகும். வந்த உடனேயே வாளை ஏந்திக் கொண்டு போருக்காக மைதானத்திற்கு புறப்பட்டுவிடுவது என்பது என்ன சீர்திருத்தம்? அவ்வாறு நடக்க முடியாது. அல்லாஹ் எமக்கு தெளிவுபடுத்தியுள்ள விஷயமே சரியானதும், உண்மையானதும் ஆகும். மஸீஹ் இரத்தம் சிந்தும் எந்தப் போரும் புரிய மாட்டார். அவர் வாளேந்தி போர் புரிவதும் அவரது பதவி கிடையாது என்ற இந்த விஷயம் ஹதீஸின் கருத்திற்கு பொருத்தமானதாகும்.

இன்னும் கூறப்போனால், அவர் சீர்திருத்தத்திற்காகவே தோன்றுவார். ஆயினும், அவர் தீமையை ஒழிப்பார். அவர் ஆதாரங்கள் மற்றும் சான்றுகளால் அந்தப் பணியை செய்வார் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

மஹ்தியின் பணி என்பது நன்மையை உருவாக்குவதாகும். அதாவது, பரவியிருக்கும் பித்அத்களையும் (சடங்குகளையும்), தீமைகளையும் அவர் நேர் வழியைக் கொண்டு மாற்றிவிடுவார். ஈஸா என்ற சொல், عَوس என்ற சொல்லிருந்து வந்துள்ளது. அது தீமையை அகற்றுவதை சுட்டிக் காட்டுகிறது. இவற்றில்

இதன் தொடர்ச்சி : 10-ம் பக்கம்

**நம்பிக்கையாளரின் பிள்ளைகள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், சுவர்க்கத்தில் தமது பெற்றோர்களுடன் சேர்த்து வைக்கப்படுவார்கள். பிள்ளைகளின் துன்பங்கள் தாய், தந்தையின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.**

ثُمَّ اِنَّ رَبَّكَ لِلَّذِيْنَ عَمِلُوا
السُّوْٓءَ بِجَهَالَةٍ ثُمَّ تَابُوْا مِنْۢ بَعْدِ ذٰلِكَ
وَاَصْلَحُوْۤا ۙ اِنَّ رَبَّكَ مِنْۢ بَعْدِهَا لَغَفُوْرٌ رَّحِيْمٌ

பொருள்: பின்னர், அறியாமையினால் (ஏதாவது) தீமை செய்ததன் பிறகு, (அதற்காகக்) கழிவிரக்கங்கொண்டு (தங்கள் தவறைத்) திருத்திக் கொள்பவர்களை அவற்றிற்குப் பின்னர், உம்முடைய இறைவன் மிக்க மன்னிப்பவனும் (அத்தகையவர்களுக்கு) மேன் மேலும், கருணை காட்டுபவனும் ஆவான் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள். (அந் நஹ்ல்:120)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

யூதர்கள் கட்டுப்படவில்லை என்பதால் அவர்கள் மீது துன்பம் இறங்கியது என்று அல்லாஹ் இதற்கு முன்னர் கூறியிருந்தான். உதாரணமாக, அல்லாஹ் கூறுகின்றான்:

وَلٰكِنْ كَانُوْۤا اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ

அவர்கள் அநீதியிழைத்து வந்தனர். எனவே அதன் விளைவாக அவர்களுக்கு வேதனை கிடைத்தது. தற்போது, அல்லாஹ் கூறுகின்றான்: யூதர்கள் தவறிழைத்தனர். ஆயினும், தற்போது அவர்கள் தவ்பா செய்தாலும் கூட அல்லாஹ் மன்னிக்கக் கூடியவனாகவும், கருணை காட்டுபவனுமாகவும் இருக்கின்றான் என்பதை அவர்கள் கண்டு கொள்வர். இதில் யூதர்கள் மட்டும் சிறப்பானவர்கள் இல்லை. மாறாக, இது பொதுவான சட்டத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது.

பிள்ளைகளின் துன்பங்கள் தாய், தந்தையின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது வெளிப்படையாகும். பிள்ளைகள் நோய்வாய்ப்படுவதன் மூலம் தாய், தந்தைக்கு வேதனை ஏற்படுவதைப் போன்று அவர்கள் நரகத்தில் வீழ்வதால் தாய், தந்தைக்கு வேதனை ஏற்படுகிறது. ஆக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்

இதன் தொடர்ச்சி : 11-ம் பக்கம்

## நபிமொழி

**கியாமத் நாளன்று அல்லாஹ் மூன்று நபர்களுடன் சண்டையிடுவான்**

(2227) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் கியாமத் நாளன்று மூன்று நபர்களுடன் சண்டையிடுவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். அதில் முதலாம் நபர், எனது பெயரால் ஒருவரிடம் உடன்படிக்கை செய்துவிட்டு பின்னர் துரோகம் செய்துவிடுபவர். இரண்டாம் நபர், சுதந்திரமான நபரை விற்று அதன் தொகையை சாப்பிட்டவர். மூன்றாம் நபர், சுதந்திரமான நபரை வேலைக்கு அமர்த்திக் கொண்டு, அவரிடம் முழுமையாக வேலை வாங்கிக் கொண்டு. பின்னர் அவருக்குரிய ஊதியத்தை அவருக்கு வழங்காதவர்.

**எந்த அண்டை வீட்டுக்காரர் அதிக உரிமை படைத்தவர்**

(2259) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அன்னார் (ரலி), ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு இரண்டு அண்டை வீட்டுக்காரர் இருக்கின்றார். அவர்கள் இருவரில் நான் யாருக்கு அன்பளிப்பு அனுப்ப வேண்டும்? என்று கேட்டார்கள். அதற்கு, அவர்கள் இருவரில் எவருடைய வீட்டின் வாசல் உமக்கு மிக அருகில் உள்ளதோ (அவருக்கு) என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹ் புகாரி-தொகுதி 4, காதியான் பதிப்பு 2008)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் சில சிறப்பான நடவடிக்கைகள், அவ்வலியாத்துகள் மற்றும் உயர் அந்தஸ்தைப் பற்றிய குறிப்புகள்**

**மரணித்தவர் பூமியில் நடப்பதைக் காண வேண்டும் என்று எவராவது விரும்பினால், அவர் அபூபக்ரை பார்த்துக் கொள்ளட்டும். அபூபக்ரின் அந்தஸ்து வெளிப்படையான நற்செயல்களால் மட்டுமே அல்ல: அதற்கும் மேற்பட்டு அவரது உள்ளத்தில் உள்ள அந்த விஷயத்தினால் இருக்கிறது.**

**( ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மவ்வூத் (அலை) )**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 16 செப்டம்பர் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு தபூக் மாதம் **16ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுடைய காலத்து அரும்பணிகளைப் பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. இது தொடர்பாக, ஸிம்மீகளின் உரிமைகளைப் பற்றிய விளக்கம் சிறிது உள்ளது. ஸிம்மீ என்பவர்கள் இஸ்லாமிய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட சம்மதித்து தங்களது மதத்தில் நிலைத்திருந்தவர்கள் ஆவர். இஸ்லாமிய அரசு அவர்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பேற்றது. முஸ்லிம்களுக்கு நேர்மாறாக அந்த மக்கள் ராணுவ தொண்டுகளை விட்டும் விலக்குப் பெற்றிருந்தார்கள். அவர்களுக்கு ஸகாத்தும் விதிக்கப்படாமல் இருந்தது.

எனவே அவர்களுடைய உயிர், செல்வம் மற்றும் பிற மனித உரிமைகளின் பாதுகாப்பிற்கு பகரமாக, அவர்களிடம் ஒரு சாதாரண வரி வசூலிக்கப்பட்டு வந்தது. அது பொதுவாக ஜிஸ்யா (வரி) என்ற பெயரால் அறியப்படுகிறது. இதற்கான அளவு ஓர் ஆண்டுக்குத் தலைக்கு வெறும் நான்கு திர்ஹமாக இருந்தது. இது, பருவமடைந்த, ஆரோக்கியமான மற்றும் வேலை பார்க்கும் தகுதி வாய்ந்த மக்களிடமிருந்து மட்டுமே வசூலிக்கப்பட்டு வந்தது.

முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், இயலாதவர்கள், தேவையுடையவர்கள் மற்றும் குழந்தைகள் இதிலிருந்து விலக்குப் பெற்றிருந்தார்கள். இன்னும் கூறப்போனால், இயலாதவர்களுக்கும், தேவையுடையவர்களுக்கும் இஸ்லாமியப் பைத்துல் மாலிலிருந்து உதவி வழங்கப்பட்டு வந்தது. ஈராக் மற்றும் சிரியா வெற்றிகளின் போது, பல்வேறு கோத்திரங்களும் மக்கள் வசிப்பிடங்களும் ஜிஸ்யா வரி அடிப்படையில் இஸ்லாமிய குடிமக்களாக ஆகிவிட்டன.

அவர்களுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளில் இதுபோன்ற சில பகுதிகளும் வைக்கப்பட்டன. அதாவது, அவர்களது துறவி மடங்களும் தேவாலயங்களும் இடிக்கப்பட்ட மாட்டாது. அவர்கள் எதிரிகளுடன் போரிடுகையில், தேவை ஏற்படும்போது அடைபட்டு இருந்து கொள்ளும் அத்தகைய கோட்டைகளும் வீழ்த்தப்பட மாட்டாது. மணி அடிப்பதற்குத் தடை இருக்காது. மேலும், பண்டிகைகளின் போது சிலுவை ஏந்துவதிலிருந்தும் தடுக்கப்பட மாட்டார்கள். அதாவது, அவர்கள் சிலுவை ஊர்வலம் போகலாம் என்றிருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஹீரா வாசிகளுடன் செய்த உடன்படிக்கையில் மற்ற விஷயங்களுடன் சேர்த்து இவ்வாறும் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதாவது, ஒருவர் வேலை செய்ய இயலாதவராக, வயது முதிர்ந்தவராக ஆகிவிட்டால் அல்லது ஒருவருக்கு ஏதாவது நோயோ, கஷ்டமோ ஏற்பட்டால் அல்லது முன்பு செல்வந்தராக இருந்து தற்போது அவருடைய மதத்து மக்களே அவருக்கு தானம் வழங்கும் அளவுக்கு ஒருவர் ஏழை ஆகிவிட்டால், இ(ப்படிப்பட்ட) வர்களுக்கு ஜிஸ்யா வரி விலக்கு அளிக்கப்படும். அதாவது, நீக்கப்பட்டு விடும்.

ஒருவர் தாருல் ஹிஜ்ரத்திலோ தாருல் இஸ்லாமிலோ இருக்கும் வரை, அதாவது இஸ்லாமிய ஆட்சி இருக்கும் இடத்தில் இருக்கும் வரை அவருடைய மற்றும் அவரது மனைவி மக்களுக்கான செலவுகள் முஸ்லிம்களின் பைத்துல்மாலிலிருந்து பூர்த்தி செய்யப்படும். ஆனால், இத்தகைய மக்கள் தாருல் ஹிஜ்ரத் மற்றும் தாருல் இஸ்லாமை விட்டு வெளியே சென்றுவிட்டால், வேறு நாடுகளுக்குச் சென்றுவிட்டால், பிறகு அவர்களுடைய மனைவி மக்களைப் பராமரிப்பது முஸ்லிம்களின் பொறுப்பாக இருக்கும்.

ஓர் அறிவிப்பின்படி, ஹீரா வாசிகளுடன் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் செய்திருந்த உடன்படிக்கையில், தேவையுடையவர்கள் மாற்றுத் திறனாளிகள் மற்றும் உலகைத் துறந்த துறவிகளுக்கு ஜிஸ்யா வரி மன்னிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பிறகு, திருக்குர்ஆனை ஒன்று சேர்க்கக்கூடிய ஒரு மிகப் பெரும் பணி ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் பொற்காலத்தின் நிகரற்ற மற்றும் மாபெரும் சிறப்புப் பணியாகும். அதன் பின்னணி முஸைலமா கஸ்ஸாபுடன் நடைபெற்ற யமாமா போருடன் தொடர்புடையது. யமாமா போரில் 1200 முஸ்லிம்கள் ஷஹீதாகிவிட்டார்கள். அவர்களில் பெரும் பெரும் ஸஹாபிகள் மற்றும் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்தது. ஓர் அறிவிப்பின்படி, ஷஹீத் ஆன ஹாஃபிஸ்மார்களின் எண்ணிக்கை 700பேர் வரை கூறப்பட்டுள்ளது.

ஆக, இத்தகைய சூழ்நிலையில் அல்லாஹ் திருக்குர்ஆனை ஓரிடத்தில் ஒன்று திரட்டுவதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தைத் திறந்தான்.

அன்னார், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இதைப் பற்றிக் கூறினார்கள். இதன் விபரம் சஹீஹ் புகாரியில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

உபைத் பின் ஸபாக் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ஸைத் பின் சாபித் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

யமாமா வாசிகளுடன் போர் புரிந்த பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை அழைத்தார்கள். (அறிவிப்பாளர் கூறுகிறார்) அப்போது, ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களும் அன்னாருடன் அமர்ந்திருப்பதை நான் கண்டேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உமர் என்னிடம் வந்தார். மேலும் என்னிடம் கூறினார்: யமாமா போரில், திருக்குர்ஆனை மனனம் செய்த ஹாஃபிஸ்மார்கள் பலர் ஷஹீத் ஆகிவிட்டார்கள். எதிர்வரும் பல்வேறு போர்களில் திருக்குர்ஆனை மனனம் செய்த பல ஹாஃபிஸ்மார்கள் அல்லது காரீகள் ஷஹீத் ஆகிவிடுவார்களோ என்று நான் அஞ்சுகிறேன். அதன் விளைவாகத் திருக்குர்ஆனின் பல பகுதிகள் வீணாவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

எனவே, தாங்கள் திருக்குர்ஆனை ஒன்று திரட்டுவதற்கான கட்டளையிட வேண்டும் என்பது எனது ஆலோசனையாகும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நான் உமரிடம், ஹஸ்ரத் ரஸுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்யாத பணியை நீர் எப்படி செய்வீர்? என்று கேட்டேன். அதற்கு, இறைவன் மீது ஆணையாக! இந்தப் பணியில் நன்மை மிகுந்திருக்கிறது என்று உமர் (ரலி) கூறினார். உமர் இந்த விஷயத்தை என்னிடம் எத்தனை முறை கூறினார் என்றால், அல்லாஹ் அந்தப் பணிக்கு எனது உள்ளத்தை திறந்துவிட்டான். என்னுடைய கருத்தும் உமருடைய கருத்தைப் போன்று ஆகிவிட்டது.

ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஸைதே! நிச்சயமாக நீர் இளமையும், அறிவும் படைத்த ஒரு மனிதர் ஆவீர். நான் உம்மை எந்தவொரு பழியை விட்டும், குறையை விட்டும் தூய்மையானவராக கருதுகிறேன்.

நீர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக வஹீயையும் எழுதி வந்தீர். எனவே, நீர் இப்பொழுது திருக்குர்ஆனைத் தேடித் தேடி அதனை ஒன்று சேர்ப்பீராக.

ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒருவேளை அன்னார் (ரலி) ஒரு மலையை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றி வைக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருந்தார்கள் எனில், அது எனக்குத் திருக்குர்ஆனை ஒன்று சேர்ப்பதற்கான கட்டளையைக் காட்டிலும் கடினமாக இருந்திருக்காது. என்னிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தப் பணி மிகப் பெரியதாகும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்யாத பணியைத் தாங்கள் எப்படி செய்வீர்கள்? என்று நான் பணிவுடன் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்,இறைவன் மீது ஆணையாக! இந்தப் பணி முழுக்க, முழுக்க நன்மையானதாகும் என்று கூறினார்கள்.

இந்த விஷயத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எத்தனை முறை கூறினார்கள் என்றால், எந்தப் பணிக்காக அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தைத் திறந்தானோ அந்தப் பணிக்காக என் உள்ளத்தையும் திறந்துவிட்டான். ஆக, நான் திருக்குர்ஆனைத் தேட ஆரம்பித்தேன். அதைப் பேரீத்த மரப்பட்டைகளிலிருந்தும், வெண்மையான கற்களிலிருந்தும் மக்களின் உள்ளங்களிலிருந்தும் ஒன்று திரட்டினேன். எதுவரை என்றால், சூரா தவ்பாவின் கடைசிப் பகுதி எனக்கு ஹஸ்ரத் அபூ ஹுஸீமா அன்ஸாரி (ரலி) அவர்களிடமிருந்து கிடைத்தது. அது அவர்களைத் தவிர, வேறு யாரிடமிருந்தும் கிடைக்கவில்லை. அந்த வசனங்கள் இவையாகும்:

لَقَدْ جَآءَكُمْ رَسُوْلٌ مِّنْ اَنْفُسِكُمْ عَزِيْزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ

(9:128) இங்கிருந்து சூரா தவ்பாவின் இறுதி வரை, பிறகு, திருக்குர்ஆனின் எழுதப்பட்ட பக்கங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணம் வரை அன்னாரிடமே இருந்தன. பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் அன்னாரிடம் இருந்தன. அதற்குப் பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம் இருந்தன.

இமாம் பஃக்வீ தமது நூல் ஷரஹுஸ்ஸனாவில் திருக்குர்ஆன் தொகுப்பு பற்றிய ஹதீஸ்களின் அடிக்குறிப்பில் கூறுகிறார்கள்: எந்தக் குர்ஆனை அல்லாஹ் தனது தூதர் (ஸல்) அவர்களுக்கு இறக்கினானோ, அதை ஸஹாபா பெருமக்கள் உள்ளபடியே எவ்வித கூடுதலும், குறைவுமின்றி முழுமையாக ஒன்று சேர்த்துவிட்டிருந்தார்கள். ஸஹாபா பெருமக்கள் திருக்குர்ஆனை ஒன்று திரட்டியதற்கான காரணமாக, ஹதீஸில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

முதலில் திருக்குர்ஆன் பேரீத்த மரப்பட்டைகள், கல், பலகைகள் மற்றும் கண்ணியத்திற்குரிய ஹாஃபிஸ்மார்களின் உள்ளங்களில் என சிதறியிருந்தது.

கண்ணியத்திற்குரிய ஹாஃபிஸ்மார்கள் ஷஹீத் ஆவதனால்,திருக்குர்ஆனின் சில பகுதிகள் அழிந்துபோய் விடக் கூடாதே என்ற அச்சம் ஸஹாபா பெருமக்களுக்கு ஏற்பட்டது. எனவே, அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து, அன்னாருக்கு திருக்குர்ஆனை ஓரிடத்தில் ஒன்று திரட்டுவதற்கான ஆலோசனை வழங்கினார்கள். எல்லா ஸஹாபா பெருமக்களின் ஒருமித்த கருத்துடன் அந்தப் பணி நடைபெற்றது. எனவே, அவர்கள் முன்னும், பின்னும் ஆக்காமல், எவ்வாறு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டார்களோ சரியாக அதே போன்று திருக்குர்ஆனைத் தொகுத்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் ஸல்) அவர்கள் தமது ஸஹாபா பெருமக்களுக்குத் திருக்குர்ஆன் ஓதிக் காட்டி வந்தார்கள் .மேலும், எவ்வாறு தற்போது நம் முன் நூல்கள் வடிவில் (திருக்குர்ஆன்) இருக்கிறதோ, இதே வரிசையில் அவர்களுக்கு திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுத்து வந்தார்கள். இந்த வரிசையை ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் அன்னாரிடம், ஒவ்வொரு வசனம் இறங்கும்போதும், இந்த வசனத்தை இன்ன சூராவில் இன்ன வசனத்திற்குப் பிறகு எழுத வையுங்கள் என்று கூறி வந்தார்கள்.

திருக்குர்ஆனை ஒன்று சேர்க்கும் பணி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெற்றது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இது குறித்து இவ்வாறு கூறுகிறார்கள்: அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது கருணை புரிவானாக! அவர்களே முதன் முதலில் திருக்குர்ஆனை நூல் வடிவில் பாதுகாத்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனை ஒன்று சேர்ப்பது தொடர்பாக குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்:

அப்போது வரை, நடந்திருக்காத விஷயம், திருக்குர்ஆன் ஒரு நூல் வடிவில் ஒன்று சேர்க்கப்படவில்லை என்பது மட்டுமே ஆகும். அந்தப் போரில், அதாவது யமாமா போரில் இந்த 500

ஹாஃபிஸ்மார்கள் கொல்லப்பட்டதும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள்.

அன்னாரிடம் சென்று, ஒரு போரில் 500 ஹாஃபிஸ்மார்கள் ஷஹீத் ஆகிவிட்டார்கள். இப்பொழுதோ பல போர்கள் நமக்கு முன்னால் உள்ளன. இன்னும் ஹாஃபிஸ்மார்கள் ஷஹீத் ஆகிவிட்டால், மக்களுக்குத் திருக்குர்ஆன் குறித்து ஐயம் உருவாகிவிடும். எனவே, திருக்குர்ஆனை ஒரு நூலாக தொகுத்துவிட வேண்டும் என்று கூறினார்கள். முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தை மறுத்துவிட்டார்கள். ஆனால், கடைசியில் அவர்களின் கூற்றை ஏற்றுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்களை இந்தப் பணிக்காக நியமித்தார்கள். அன்னார், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் திருக்குர்ஆனை எழுதி வந்தார்கள். பல சஹாபா பெருமக்களை அன்னாருக்கு உதவி செய்வதற்காக நியமித்தார்கள். ஆயிரக்கணக்கான சஹாபா பெருமக்கள் திருக்குர்ஆனின் ஹாஃபிஸ்களாக இருந்தனர்.

ஆனால், திருக்குர்ஆனை எழுதும்போது ஆயிரக்கணக்கான சஹாபிகளை ஒன்றுதிரட்டுவது சாத்தியமற்றதாக இருந்தது. எனவே, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுத்துப் பிரதிகளிலிருந்து திருக்குர்ஆனை எழுதுமாறு கட்டளையிட்டு விட்டார்கள். அத்துடன் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களில் குறைந்தபட்டசம் 2 ஹாஃபிஸ்மார்கள் அதற்கு சான்றளிப்பவர்களாக இருக்க வேண்டும் என்ற முன்னெச்சரிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறிவிட்டார்கள்.

ஆக, பல்வேறு தோல்களிலும், எலும்புகளிலும் எழுதப்பட்டிருந்த திருக்குர்ஆன் ஓரிடத்தில் ஒன்று சேர்க்கப்பட்டது. திருக்குர்ஆனை மனனம் செய்த ஹாஃபிஸ்மார்கள் அதற்கு சான்றளித்தார்கள். திருக்குர்ஆன் தொடர்பாக ஏதும் ஐயம் ஏற்பட முடியும் என்றால், அது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணம் மற்றும் அதற்கு இடைப்பட்ட அந்த நேரம் தொடர்பாக மட்டுமே ஏற்பட முடியும்.

ஆனால், எந்த மறை தினமும் ஓதப்பட்டு வந்ததோ, எந்த மறையை ஒவ்வொரு ரமலானிலும் ஹாஃபிஸ்மார்கள் மற்ற முஸ்லிம்களுக்கு ஓதிக் காட்டி வந்தார்களோ, எந்த மறை முழுவதையும் ஆயிரக்கணக்கான மனிதர்கள் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை மனனம் செய்திருந்தார்களோ, அது ஒரு நூல் வடிவில் ஒன்று சேர்க்கப்பட்டிருக்க-வில்லை என்றாலும் எந்த மறையை பல சஹாபா எழுதி வந்தார்களோ, அதை ஒரு நூல் வடிவில் ஒன்று சேர்ப்பதில் எவரும் சிரமத்தை உணர்ந்திருக்க முடியுமா?

பிறகு, எந்த நபர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் திருக்குர்ஆனை எழுதும் பணியில் நியமிக்கப்பட்டிருந்தாரோ, அதை மனனம் செய்திருந்த ஹாஃபிஸாகவும் இருந்தாரோ அவருக்கு சிரமமாக இருந்திருக்க முடியுமா? திருக்குர்ஆன் தினமும் ஓதப்பட்டு வந்தபோது, அந்தப் பிரதியில் ஏதாவது தவறு ஏற்பட்டு மற்ற ஹாஃபிஸ்மார்கள் அதைப் பிடிக்காமல் இருந்திருப்பார்களா?

இதுபோன்ற சாட்சியங்கள் மீது ஐயம் கொள்ளப்பட்டால்,பிறகு உலகில் எந்த ஆதாரமும் எஞ்சியிருக்காது. எந்த அளவு தொடர்ச்சியாக திருக்குர்ஆன் உலகில் நிலை பெற்றிருக்கிறதோ அந்த அளவு தொடர்ச்சியாக எந்த எழுத்துப் பிரதியும் நிலை பெற்றிருக்கவில்லை என்பதே உண்மை.

திருக்குர்ஆன் அசல் நிலையில் உள்ளது: அதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்பதற்கான ஆதாரத்தைப் பின்னர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்து வைக்கின்றார்கள்:

மாற்றம் செய்யப்பட்டது: இப்படி இருந்தது: அப்படி இருந்தது என்று இன்றைய காலத்திலும் ஆட்சேபனை எழுகிறது. இது அதற்கான பதிலாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓர் ஆட்சேபனைக்கு பதில் அளித்தவாறு கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் முழுத் திருக்குர்ஆனும் எழுதப்படவில்லை என்ற ஓர் ஆட்சேபனை செய்யப்படுகிறது. இதற்கான பதில், இது சரியல்ல என்பதாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் நிச்சயமாக முழுத் திருக்குர்ஆனும் எழுதப்பட்டிருந்தது. எனவே எழுதப்படவில்லை என்று கூறுவது தவறாகும். எழுதப்பட்டது. இது குறித்து ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்:

ஒரு பகுதி இறங்கும்போது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எழுதுபவர்களை அழைத்து அதை இன்ன இன்ன இடத்தில் சேருங்கள் என்று கூறுவார்கள்.

இந்த வரலாற்று சான்று இருக்கும்போது, திருக்குர்ஆன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் முழுமையாக எழுதப்படவில்லை என்று கூறுவது அறிவீனமாகும்.

பிறகு, **ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் ஏன் எழுதப்பட்டது? என்ற கேள்வி எஞ்சியுள்ளது. இதற்கான பதில் என்னவென்றால், இப்போது திருக்குர்ஆன் ஒரு தொகுப்பாக இருப்பதைப் போன்று ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரே தொகுப்பாக இருக்கவிலலை. திருக்குர்ஆன் பாதுகாக்கப்பட்டதாக இல்லை என்று மக்கள் கருதி விடக்கூடாது என்ற சிந்தனை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குத் தோன்றியது.** ஆக, இது குறித்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அன்னார் கூறிய சொற்கள் இவையாகும். اِنِّیْ اَرٰی اَنْ تَاْمُرَ جَمْعَ الْقُرْاٰنِ

திருக்குர்ஆனை ஒரு நூல் வடிவில் தொகுப்பதற்குத் தாங்கள் கட்டளையிடுவதையே நான் பொருத்தமானதாகக் கருதுகிறேன்.

**தாங்கள் அதனை எழுத வையுங்கள் என்று அன்னார் கூறவில்லை.**

**சுருக்கமாக, அந்த நேரத்தில் திருக்குர்ஆனின் தாள்களை ஒரு நூல் வடிவில் தொகுப்பது பற்றிய விஷயமாக இருந்தது: எழுதுவது தொடர்பான விஷயம் இருக்கவில்லை என்பதைச் சொற்களே தெரிவிக்கின்றன.**

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் திருக்குர்ஆன் ஒரு தொகுப்பில் ஒன்று சேர்க்கப்பட்டு விட்டது. பிற்காலத்தில், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் மேற்கொண்டு எடுத்து வைக்கப்பட்ட அடி என்னவென்றால், முழு அரேபியாவும், இன்னும் சொல்வதாயின் முழு முஸ்லிம் உலகமும் ஒரே கிராஅத்தில் ஒன்றிணைக்கப்பட்டது.** ஆக, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் திருக்குர்ஆனைப் பரப்புதல் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் இவ்வாறு ஒரு முறையீடு வந்தது: அதாவது, பல்வேறு கோத்திரத்து மக்கள் பல்வேறு கிராஅத்களில் திருக்குர்ஆனை ஓதுகிறார்கள். முஸ்லிம் அல்லாதவர்கள் மீது இது தவறான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பல திருக்குர்ஆன் பிரதிகள் இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர்.

இங்கு பல்வேறு கிராஅத் என்பதன் பொருள், ஒரு கோத்திரம் ஓர் எழுத்தை

ஸபர் வைத்துப் படிக்கிறது. இரண்டாவது கோத்திரம் ஸேர் வைத்து படிக்கிறது. மூன்றாவது கோத்திரம் பேஷ் வைத்து ஓதுகிறது என்பதாகும்.

மேலும், இந்த விஷயம், அரபியைத் தவிர, வேறு எந்த மொழியிலும் காணப்படுவதில்லை. எனவே அரபி தெரியாத மனிதர் கேட்கும்போது இவர் ஒன்றை சொல்கிறார். அவர் ஒன்றை சொல்கிறார் என்று நினைப்பார். ஆனால், அவர்கள் ஒரே விஷயத்தை தான் கூறிக் கொண்டிருப்பார்கள்.

**ஆக, இந்தக் குழப்பத்திலிருந்து காப்பாற்றுவதற்காக, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் எழுதப்பட்ட எழுத்துப் பிரதியிலிருந்து பல பிரதிகள் தயாரித்து, பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், வேறு எந்தக் கிராஅத்திலும் ஓதக் கூடாது என கட்டளையிட வேண்டும் என்றும் முடிவெடுத்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் செய்த இந்தப் பணி சிறிதும் தவறானதாக இருக்கவில்லை.**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் அரேபிய மக்கள் கோத்திரங்களாகப் பிரிந்து வாழ்ந்தார்கள். அதாவது, ஒவ்வொரு கோத்திரமும் மற்ற கோத்திரத்தை விட்டு தனித்து வாழ்ந்து வந்தது.எனவே, அவர்கள் தத்தமது பேச்சு வழக்குக்குப் பழக்கப்பட்டு விட்டிருந்தார்கள். அதாவது, அவர்கள் பேசும் விதம் வெவ்வேறானதாக இருந்தது. ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கைகளில் ஒன்றிணைந்து அரபு மக்கள் பண்பட்டு விட்டிருந்தார்கள். ஒரு சாதாரண மொழி என்பதிலிருந்து அரபு மொழி ஓர் அறிவுப்பூர்வமான மொழியாகிவிட்டது.

அரபு மக்களில் பெரும்பாலார் எழுதப் படிக்க கற்றுக் கொண்டார்கள். அதன் காரணமாக, ஒருவர் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி! ஒவ்வொருவராலும் அறிவுசார் மொழியில் அந்தச் சொல் உச்சரிக்கப்பட்டு வந்தது போன்றே சுலபமாக அந்தச் சொல்லை உச்சரிக்க முடிந்திருந்தது. உண்மையில், அது தேசிய மொழியாக இருந்தது.

**எனவே, எல்லா மக்களும் ஓர் அறிவுசார் மொழியை உச்சரிக்க பழகிக் கொண்ட பிறகும், அவர்கள் தங்களது கோத்திரத்தின் உச்சரிப்பைக் கொண்டு திருக்குர்ஆனை ஓதிக் கொண்டே செல்வதற்கும், அந்நிய சமுதாயங்களுக்குத் தடுமாற்றத்திற்கான காரணியாக அமைவதற்கும் அனுமதி அளிக்கப்படுவதற்குக் காரணம் ஏதும் இருக்கவில்லை.**

**எனவே, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவின் மொழிக்கு ஏற்ப குறியீடுகளை இட்டு திருக்குர்ஆனை எழுதி எல்லா நாடுகளிலும் அதன் பிரதிகளை விநியோகம் செய்துவிட்டார்கள். மேலும், இனி மக்கா உடைய ஓதும் முறை தவிர, எந்தக் கோத்திரத்துடைய ஓதும் முறையிலும் திருக்குர்ஆனை ஓதக் கூடாது என்று கட்டளையிட்டு விட்டார்கள்.**

**இந்த விஷயத்தை புரியாததன் காரணமாக, ஐரோப்பிய எழுத்தாளர்களும் பிற சமுதாயங்களின் எழுத்தாளர்களும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒரு புதிய குர்ஆனை உருவாக்கி விட்டார்கள் அல்லது உஸ்மான் திருக்குர்ஆனில் புதிய மாற்றம் செய்துவிட்டார் என்று எப்போதும் ஆட்சேபனை செய்து வருகிறார்கள். ஆனால், இப்பொழுது எடுத்துக் கூறியதே உண்மை ஆகும்.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சந்தேகமின்றி, திருக்குர்ஆன் தெளிவான வஹீ ஆகும்.இது முழுக்க முழுக்க எதுவரை என்றால்,இதன் புள்ளிகளும் எழுத்துகளும் கூட நிச்சயம் தொடர்ச்சியாக இருந்து வருகின்றன.அல்லாஹ் இதை முழு ஏற்பாட்டுடன் வானவர்களின் பாதுகாப்பில் இறக்கினான். பின்னர், இது குறித்து எல்லா வகையான ஏற்பாடுகளையும் செய்வதில் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் எந்தக் குறையும் விட்டு வைக்கவில்லை.

திருக்குர்ஆன் இறங்க, இறங்க அன்னார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு வசனத்தையும் தமது கண் முன் எழுத வைப்பதை நிரந்தரமாக மேற்கொண்டார்கள். எதுவரை என்றால், அன்னார் (ஸல்) அதை முழுமையான முறையில் ஒன்று சேர்த்தார்கள். தாமே சுயமாக வசனங்களை வரிசைப்படுத்தினார்கள். அவற்றை ஒன்றிணைத்தார்கள்.

தொழுகையிலும், தொழுகைக்கு வெளியிலும் அதை நிரந்தரமாக ஓதி வந்தார்கள்.அன்னார் (ஸல்) அவர்கள் உலகை விட்டுச் சென்று, தமது உயரிய தோழனை அகில உலகங்களையும் படைத்து பரிபாலிக்கும் தமது அன்பனை சென்றடையும் வரை இவ்வாறே செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**இதற்குப் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதன் எல்லா சூராக்களையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து செவியேற்ற வரிசைப்படி ஒன்று சேர்ப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். அடுத்து ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்குப் பிறகு, அல்லாஹ் மூன்றாவது கலீஃபா ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு நல்வாய்ப்பு வழங்கினான். அன்னார் (ரலி) குரைஷியர்களின் மொழி வழக்கிற்கு ஏற்ப, திருக்குர்ஆனை ஒரு கிராஅத்தில் ஒன்றிணைத்தார்கள். மேலும், அதை எல்லா நாடுகளிலும் பரவச் செய்து விட்டார்கள்.**

சஹீஃபா சித்தீக்கீ எப்பொழுது வரை பாதுகாப்பாக இருந்தது? என்ற கேள்வி உள்ளது.அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுத வைத்த அந்தப் பிரதி எப்பொழுது வரை பாதுகாப்பாக இருந்தது?

இது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்கள் மூலமாக எந்தத் திருக்குர்ஆனை ஒரு நூல் வடிவில் தொகுக்கச் செய்தார்களோ அது சஹீஃபாயே சித்தீக்கீ எனப்படுகிறது. இது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் அன்னாரின் மரணம் வரை இருந்தது. அதன் பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்துவிட்டது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம் ஒப்படைத்துவிட்டார்கள். எவருக்கும் கொடுக்கக் கூடாது. ஆயினும், எவர் அதைப் பார்த்து எழுத வேண்டுமோ அல்லது தனது பிரதியைத் திருத்திக் கொள்ள வேண்டுமோ அவர் அதிலிருந்து பயனடையலாம் என்று அன்னார் (ரலி) வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள்.

ஆக, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் காலகட்டத்தில் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடமிருந்து தற்காலிகமாக அதைப் பெற்று சில பிரதிகளை எழுத வைத்தார்கள். மேலும், அந்தப் பிரதியை ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

ஹிஜ்ரி 54 ஆம் ஆண்டு மர்வான் மதீனாவின் கவர்னர் ஆனபோது, அவர் அந்தப் பிரதியை ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடமிருந்து பெற நினைத்தார். ஆனால், ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் (கொடுக்க) மறுத்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் மரணமடைந்த பிறகு, மர்வான்,

அப்துல்லாஹ் பின் உமரிடமிருந்து அதைப் பெற்று அதை வீணடித்து விட்டார். ஆனால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் முன்னரே அதைப் பாதுகாத்து வைத்திருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் எல்லாருக்கும் முதலாக நிறைவேற்றிய பணிகள் அல்லது எந்த சிறப்புப் பணிகள் முதன்முதலில் அன்னாருடன் தொடர்புடையவையாக இருக்கின்றனவோ அவை அவ்வலியாத்தே அபூபக்ர் - அபூபக்ரின் முதன்மைப் பணிகள் என்று பெயரிடப்பட்டுள்ளன. அன்னாரின் பணிகளில் பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. அவற்றை அன்னார் முதன் முதலாக நிறைவேற்றினார்கள்.

அன்னார் எல்லாருக்கும் முதலாக இஸ்லாத்தை ஏற்றார்கள். இரண்டாவது, எல்லாருக்கும் முதலாக,அன்னார் (ரலி) மக்காவில் தமது இல்லத்திற்கு முன்பாக பள்ளிவாசலை அமைத்தார்கள். மூன்றாவதாக, எல்லாருக்கும் முதலாக மக்காவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் ஆதரவாக மக்கத்து குறைஷியர்களுடன் சண்டையிட்டார்கள். நான்காவதாக, எல்லாருக்கும் முதலாக இஸ்லாத்தை ஏற்றதன் காரணமாக அநீதி, அக்கிரமத்திற்கு இலக்காகிக் கொண்டிருந்த பல்வேறு ஆண்,பெண் அடிமைகளை விலைக்கு வாங்கி விடுவித்தார்கள்.

ஐந்தாவது, முதன் முதலாக திருக்குர்ஆனை ஒரு நூல் வடிவில் ஒன்று சேர்த்தார்கள். ஆறாவது, எல்லாருக்கும் முதலாக அன்னார் (ரலி) திருக்குர்ஆனுக்கு முஸ்ஹஃப் என்று பெயரிட்டார்கள். ஏழாவது, எல்லாருக்கும் முதலாக நேர்வழிபெற்ற கலீஃபாவாக ஆக்கப்பட்டார்கள். எட்டாவது, எல்லாருக்கும் முதலாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் ஹஜ் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள்.

ஒன்பதாவது, எல்லாருக்கும் முதலாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் தொழுகையில் முஸ்லிம்களுக்கு இமாமத் செய்தார்கள். பத்தாவது, முதன் முதலாக இஸ்லாத்தில் பைத்துல் மாலை உருவாக்கினார்கள்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

பதினோறாவது, இஸ்லாத்தில் முஸ்லிம்கள் உதவித் தொகை நிர்ணயித்த முதல் கலீஃபா அன்னார் ஆவார்கள். பன்னிரெண்டாவது, தமது பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்த முதல் கலீஃபா ஆவார்கள்.அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நியமித்தார்கள்.

பதிமூன்றாவது, அன்னார் (ரலி) தமது கிலாஃபத்தில் மக்கள் பைஅத் செய்யும் போது தந்தை உயிருடன் இருந்த முதல் கலீஃபா ஆவார்கள். அன்னாரின் தந்தை ஹஸ்ரத் அபூகஹாஃபா உயிருடன் இருந்தார்கள்.

பதினான்காவது, இஸ்லாத்தில் முதன் முதலாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு சுட்டுப் பெயர் வழங்கிய முதல் நபர் அன்னார் ஆவார்கள். பதினைந்தாவது, நான்கு தலைமுறைகள் சஹாபாவாக இருக்கும் கண்ணியம் பெற்ற முதல் நபர் அன்னார் ஆவார்கள்.

அன்னாரின் தந்தையார் அபூ கஹாஃபா சஹாபி ஆவார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தாமும் சஹாபியாக இருந்தார்கள். அன்னாரின் மகன் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலி) மற்றும் அன்னாரின் மகன் வழிப் பேரர் ஹஸ்ரத் முஹம்மத் பின் அப்திர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகிய இவர்கள் அனைவரும் சஹாபிகளாக இருந்தனர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நற்குணங்கள் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அன்னாரின் அருளுக்குரிய தோற்றத்தைப் பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அதாவது, அவர்களை சான்றாகக் கொண்டு விஷயம் கூறப்பட்டுள்ளது:

(ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் நடந்து சென்று கொண்டிருந்த ஓர் அரேபியரைக் கண்டார்கள். அப்போது, அவர்கள் பல்லக்கில் அமர்ந்திருந்தார்கள். அன்னார் (ரலி) கூறினார்கள்: நான் அவரை விட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் தோற்றம்) ஒத்த நபர்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

எவரையும் கண்டதில்லை.

அறிவிப்பாளர் கூறுகிறார்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் தாங்கள் எங்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தோற்றத்தைக் கூறுங்கள் என்று நாங்கள் கேட்டுக் கொண்டோம். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெள்ளை நிறத்தையுடைய மனிதராக இருந்தார்கள். ஒல்லியாக இருந்தார்கள். கன்னங்களில் சதை குறைவாக இருந்தது. இடை சற்று வளைந்திருந்தது. அதனால், அன்னாருடைய கீழாடையும் இடுப்பில் நிற்காது. கீழே இறங்கிவிடும். முகத்தின் சதை குறைவானதாக இருந்தது. முகம் அதிகம் (சதையால்) நிறைந்திருக்கவில்லை. கண்கள் உள்பக்கமாக இருந்தன. நெற்றி விசாலமாக இருந்தது.

இப்னு ஸைரீன் கூறுகிறார்கள்:

நான் ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முடிகளுக்கு நிறம் பூசி வந்தார்களா? என்று கேட்டேன். அதற்கு, அவர்கள் அன்னார் தமது தலைமுடி மற்றும் தாடியில் மருதாணியும், கதமையும் கொண்டு நிறமிட்டு வந்தார்கள் என்று கூறினார்கள்.கதம் என்பது ஒரு மூலிகையின் பெயராகும்.

**இறைவனுக்கு அஞ்சுதல், தீமைகளில் இருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் தக்வாவை மேற்கொள்ளுதல் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:**

கண்ணியத்திற்குரிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ரபீஆ பின் ஜாஃபர் (ரலி) அவர்களுக்கும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் சிறிது நிலத்தை வழங்கினார்கள். ஒரு மரம் தொடர்பாக இருவரிடமும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது.

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் விவாதத்தின்போது, ஏதோ கடுமையாகப் பேசி விட்டார்கள். ஆனால், பின்னர் அதனால் வெட்கப்பட்டார்கள். மேலும், ரபீஆவே! நீங்களும் என்னை ஏதாவது கடுமையாக பேசிவிடுங்கள். அது அதற்கு பதிலாக ஆகிவிடட்டும். நான் எவ்வாறு கடுமையாகப் பேசினேனோ அவ்வாறே, நீங்களும் என்னை கடுமையாகப் பேசிவிடுங்கள் என்று கூறினார்கள்.**

**ஆனால், ஹஸ்ரத் ரபீஆ (ரலி)**

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

**அவர்கள் மறுத்துவிட்டார்கள். அவர்கள் இருவரும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன் ஆஜரானார்கள். நடந்தது அனைத்தையும் கூறினார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

**ரபீஆவே! நீர் கடுமையாக பதிலளிக்காதீர். மேலும் நீர்**

**غَفَرَ اللّٰهُ لَكَ يَا اَبَابَكْرٍ**

**என்று துஆ செய்வீராக.**

**பொருள்: அபூபக்ரே! அல்லாஹ் உங்களை மன்னிப்பானாக!**

**இதனால் அன்னார் (ரலி) அவர்கள் அவ்வாறே செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தைக் கேட்டதும், அது அவர்களை எந்த அளவு பாதித்தது என்றால், அன்னார் தேம்பி தேம்பி அழுதவாறு திரும்பிச் சென்றார்கள்.**

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஒரு பறவையைப் பார்த்தார்கள். அது ஒரு மரத்தின் மேலே இருந்தது. அன்னார் (ரலி) கூறினார்கள்: பறவையே! உனக்கு நற்செய்தி. **அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உன்னைப் போன்று இருந்திருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நீ மரத்தில் அமருகிறாய். பழத்தை தின்கிறாய். பிறகு, பறந்து சென்றுவிடுகிறாய். உன்னிடம் எந்தக் கேள்வி கணக்கும் இருக்காது. உனக்கு எந்த தண்டனையும் கிடைக்காது.**

**அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் வழிப்பாதையின் ஒரு ஓரத்தில் ஒரு மரமாக இருந்திருக்க ஆசைப்படுகிறேன்.** ஒட்டகம் என்னைக் கடந்து சென்றிருக்கும். என்னைப் பிடித்து தனது வாயில் போட்டுக் கொண்டிருக்கும். என்னை மென்றிருக்கும். பிறகு, என்னை விரைவாக விழுங்கியிருக்கும். அந்த ஒட்டகம் என்னைப் புழுக்கை வடிவில் வெளியே தள்ளியிருக்கும். நான் மனிதாக ஆகியிருக்க மாட்டேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அந் நபாவின் 41 வது வசனமான وَيَقُوْلُ الْكَافِرُ يَالَيْتَنِيْ كُنْتُ تُرَابًا என்பதற்கு விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள்:

பொருள்: அந்தோ! நான் வெறும் மண்ணாக இருந்திருக்க வேண்டாமா! என்று நிராகரிப்பவர் கூறுவார்.

சில முஸ்லிம் பிரிவுகள் சஹாபா மீதான காழ்ப்புணர்ச்சியில் எந்த அளவு மிகைத்து விட்டார்கள் என்றால், அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணத்தின்போது இதே வரியைத் தான் கூறி வந்தார்கள். எனவே அவர்கள் நிராகரித்தது நிரூபணமாகிறது. நவூதுபில்லாஹ்.

وَيَقُوْلُ الْكَافِرُ يَالَيْتَنِيْ كُنْتُ تُرَابًا

என்று அன்னார் ஓதி வந்தார்கள். அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஓதி வந்தார்கள்.

இங்கு காஃபிர் கூறுவான் என்ற சொல் இருப்பதால், அன்னார் (ரலி) காஃபிர் ஆகிவிட்டார்கள். நவூதுபில்லாஹ்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஆனால்,இந்த அறிவிப்பு நிரூபணமானால் இது உண்மையான விஷயம் என்றால், இந்த வசனம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றியது என்றால்,ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஈமானின் அடிப்படையில் இதற்குப் பொருள் இவ்வாறு அமையும்: நிராகரிப்பாளர்களின் கூற்றுகளை நிராகரிப்பவர் அதாவது அபூபக்ர் இவ்வாறு கூறுவார்:

அந்தோ! இறைவன் என்னுடன் இப்படி நடந்து கொண்டால், என்னுடைய நற்செயல்களுக்கு வெகுமதி வழங்கியும், என்னுடைய தவறுகளுக்கு தண்டனை அளிக்காமலும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! மேலும், இந்த வரி ஒரு முழுமையான நம்பிக்கை கொண்டவரின் வரியாகும்.

ஹதீஸ்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொடர்பாகவே அன்னார் இவ்வாறு கூறி வந்ததாக உள்ளது: நான் எனது நற்செயல்கள் காரணமாக, மன்னிக்கப்பட மாட்டேன். மாறாக, அல்லாஹ்வின் அருளால் மன்னிக்கப்படுவேன். காஃபிர் என்ற சொல் இவ்விடம் வஞ்சப்புகழ்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பொருள் என்னவென்றால், இந்த மக்கள் எப்படிப்பட்ட நபரை காஃபிர் என்று கூறுகிறார்கள் என்றால், அவர் போரில் எல்லாரையும் விட அதிகம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்து வந்தார் .அவர் தமது செல்வம் முழுவதையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அர்பணித்துவிட்டார். 11 வயது மகளை அன்னாருக்கு மணம் முடித்துக் கொடுத்தார். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கோ வயது 54, 55 ஆக இருந்தது.

ஹிஜ்ரத்தில் அன்னாருடன் இருந்தார். அப்பொழுது முழு மக்காவுக்கு எதிரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூபக்ரை மட்டும் உடன் வைத்துக் கொண்டு நின்றார்கள்.

திருக்குர்ஆன் வஞ்சப்புகழ்ச்சியாகக் கூறுகிறது: இந்தத் தியாகங்களை செய்த நபரோ காஃபிர் ஆவார்.

ஒரு வேளை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொடர்பாக இந்த வசனம் இருப்பதாகப் புரியப்பட்டாலும் கூட இந்தச் சொல் வஞ்சப் புகழ்ச்சியாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது, இந்தத் தியாகங்கள் செய்யக் கூடிய நபரோ காஃபிர் ஆவார்.ஆனால், எவர்கள் அவருடைய நற்செயல்களுக்கு நிகரான செயல்கள் எதையும் செய்யவில்லையோ அவர்கள் தங்களை மூஃமீன் என்று கூறிக் கொண்டு திரிகிறார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரண நேரம் நெருங்கியபோது, அன்னார் (ரலி), ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்:

எனது மகளே! எனது பிள்ளைகளில் எல்லாரையும் விட அன்பிற்குரியவரும், பிடித்தவரும் நீங்கள் தான் என்பது உங்களுக்குத் தெரியும். நான் என்னுடைய இன்ன இடத்து நிலத்தை உங்களுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தேன். ஒருவேளை நீங்கள் அதை கைவசம் வைத்திருந்தாலோ, அதன் இலாபத்திலிருந்து பலனடைந்திருந்தாலோ அது நிச்சயம் உங்களுக்கு சொந்தமானதாக இருந்தது. ஆனால், இப்போது அது எனது அனைத்து வாரிசுகளுக்கும் சொந்தமானதாகும்.

நீங்கள் அதை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்த அன்பளிப்பை நீங்கள் திருப்பிக் கொடுத்துவிடுங்கள். ஏனெனில், நீங்கள் அதை கைவசம் வைத்துக் கொள்ளவில்லை. என்னுடைய வாழ்நாளில், அந்த நிலம் என்னுடைய பயன்பாட்டிலேயே இருந்தது.

இவ்வாறு அது என்னுடைய சந்ததிகள் அனைவர் மத்தியிலும், அல்லாஹ்வின் மறைக்கு ஏற்ப விநியோகிக்கப்படும். மேலும், இவ்வாறு நான் எனது சந்ததிகளில் எவருக்கும் மற்றவர் மீது முதன்மை அளிக்காத நிலையில் எனது இறைவனை நான் சந்திக்க வேண்டும்.

இதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

தங்களுடைய கட்டளை சொல்லுக்கு சொல் செயல்படுத்தப்படும்.

அடுத்ததாக, நான் கூறப்போகும் சம்பவத்தை முன்னரும் கூறியிருக்கிறேன். ஆனால், அன்னாருடைய நற்குணங்கள் தொடர்பாகவும் இங்கே மீண்டும் எடுத்துக் கூறி விடுகிறேன். அல்லாஹ் அன்னாருக்கு

கிலாஃபத் போர்வையை அணிவித்த அந்த நேரத்தின் குறிப்பாகும். அதாவது, துணி வியாபாரம் செய்து வந்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆன பிறகு, அடுத்த நாளே வழக்கப்படி தோளில் துணி மூட்டையைத் தூக்கிக் கொண்டு சந்தையை நோக்கிச் சென்றார்கள். வழியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களையும், ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களையும் சந்தித்தார்கள். அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! எங்கே செல்கிறீர்கள்? எனக் கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், சந்தைக்கு என்று பதிலளித்தார்கள்.

தாங்கள் முஸ்லிம்களின் ஆட்சியாளர் ஆவீர்கள். வாருங்கள்! நாங்கள் தங்களுக்காக சிறிது உதவிப் பணம் நிர்ணயிக்கின்றோம். தாங்கள் திரும்பிச் செல்லுங்கள். உதவிப் பணம் நிர்ணயித்து விடுவோம். வியாபாரம் செய்ய வேண்டிய எந்தத் தேவையும் இல்லை என்று அவர்கள் கூறினர்.

அல்லாமா இப்னு ஸயீத் அவர்கள் உதவித் தொகைக்கான விளக்கத்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

அன்னாருக்கு இரண்டு போர்வைகள் வழங்கப்பட்டு வந்தன. அவை பழையதானதும் அவற்றைத் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பெற்றுக் கொள்வார்கள். பயணத்தின்போது, சவாரியையும், கிலாஃபத்துக்கு முன்னர் என்ன செலவு இருந்ததோ அதற்கு ஏற்பவே தமக்கும், தம்மைச் சார்ந்தவர்களுக்கும் செலவையும் பெற்று வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முழு இஸ்லாமிய உலகிற்கும் அரசராக இருந்தார்கள். ஆனால், அன்னாருக்கு என்ன கிடைத்து வந்தது? பொது மக்களின் செல்வங்களின் பாதுகாவலராக அன்னார் இருந்தார்கள். ஆனால், சுயமே அந்தப் பணத்தின் மீது எந்த அதிகாரத்தையும் அன்னார் கொண்டிருக்கவில்லை. சந்தேகமின்றி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகப் பெரிய வியாபாரியாக இருந்தார்கள்தான்: ஆனால்,பணம் வந்ததுமே உடனடியாக அதை இறை வழியில் கொடுக்கும் வழக்கம் பெரும்பாலும் அன்னாரிடம் இருந்தது.

எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணமடைந்து, அன்னார் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனபோது, அப்பொழுதே அன்னாரிடம் ரொக்கப் பணம் இருக்கவில்லை. கலீஃபா ஆன அடுத்த நாளே அன்னார் (ரலி) துணி மூட்டையை சுமந்து கொண்டு அதை விற்கப் புறப்பட்டுவிட்டார்கள். வழியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரை சந்தித்தபோது, என்ன செய்யப் போகிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு, நான் ஏதாவது உணவு உண்ண வேண்டுமே! துணி விற்கவில்லை என்றால், எங்கிருந்து உண்பேன்? என்று அன்னார் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

இவ்வாறு நடக்க முடியாது. தாங்கள் துணி விற்று வந்தால், பிறகு கிலாஃபத் பணியை யார் செய்வார்கள்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு பதிலளித்தவாறு, நான் இந்த வேலையை செய்யவில்லை என்றால் பிறகு என்னுடைய வாழ்க்கையை எப்படி கழிப்பேன்? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு, தாங்கள் பைத்துல் மாலிலிருந்து உதவித் தொகை எடுத்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு பதிலளித்தவாறு, என்னால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. எனக்கு பைத்துல் மாலில் என்ன உரிமை இருக்கிறது? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

மார்க்கப் பணியாற்றுபவர்கள் மீதும் பைத்துல் மால் பணம் செலவு செய்யப்படலாம் என்று திருக்குர்ஆன் கூறியிருக்கும் போது, தாங்கள் ஏன் பெறக்கூடாது? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

ஆக, இதன் பிறகு பைத்துல் மாலில் இருந்து அவர்களுக்கான உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், அந்த நேரத்தைப் பொருத்த வரை, அந்த உதவித் தொகை உணவு,உடைக்கான தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவே இருந்தது.

இப்னு அபீ மலீக்கா அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கையில் இருந்து (ஒட்டகத்தை ஓட்டும்) குச்சி விழுந்துவிட்டால், அன்னார் தமது ஒட்டகத்தை அமர வைத்து அந்தக் குச்சியை எடுப்பார்கள். தாங்கள் ஏன் எங்களுக்கு கட்டளை இடவில்லை? நாங்கள் எடுத்துக் கொடுத்திருப்போமே! என்று அன்னாரிடம் கூறப்பட்டது.

அதற்கு, **நான் மக்களிடம் எதையும் கேட்டுப் பெறக் கூடாது என்று எனது அன்பிற்குரியவர் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.**

இந்த அளவு கவனமாக இருந்து வந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருமுறை பள்ளிவாயிலில் சில மக்கள் இவ்வாறு பேசுவதைக் கேட்டார்கள்: நம்மை விட அபூபக்ருக்கு என்ன சிறப்பு உள்ளது? எப்படிப்பட்ட நற்செயல்களை அவர் செய்கிறாரோ அப்படிப்பட்ட நற்செயல்களை நாமும் செய்கிறோம்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதைக் கேட்டபோது, மக்களே! அபூபக்ரின் சிறப்பு, தொழுகை மற்றும் நோன்புகளினால் அல்ல. மாறாக, அவரது உள்ளத்தில் இருக்கும் அந்த நன்மையின் காரணமாக இருக்கிறது என்று கூறினார்கள்.

அதாவது, அன்னாரது உள்ளத்தில் இருக்கும் நன்மை, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான பற்றுறுதி மற்றும் அல்லாஹ்வின் மீதான அதிக அச்சமும் இந்த தரத்தை உடையதாக உள்ளது. அதனால் தான் உங்களை விட அவருக்கு சிறப்பு உள்ளது. அதற்கு ஏற்ப அன்னாரின் செயல்களும் உள்ளன. அதாவது உள்ளத்தில் மட்டும் இருக்கவில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஒரு திருக்குர்ஆன் வசனத்திற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தகுதி மற்றும் அந்தஸ்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

உமக்கு முழுமையான நம்பிக்கை எனும் தரம் கிடைக்கப் பெறும் வரை, அனைத்து திரைகளும் இருளின் போர்வைகளும் அகன்று நான் முன்னிருந்தவன் அல்ல: மாறாக, இப்பொழுதோ புதிய நாடு! புதிய பூமி! புதிய வானம்! இருக்கிறது. நானும் ஒரு புதிய படைப்பினம் ஆவேன்! என்பது உமக்குப் புரிந்துவிடும் வரை நீர் இபாதத் செய்து கொண்டே இருப்பீராக!

இந்த இரண்டாவது வாழ்க்கையையே சூஃபிமார்கள் பகா எனும் எஞ்சியிருத்தல் என்ற பெயரால் அழைக்கிறார்கள். ஒரு மனிதர் இந்தத் தரத்தை எட்டி விடும்போது, அல்லாஹ்வின் ஆன்மா அவருள் ஊதப்படுகிறது. வானவர்கள் அவரிடம் இறங்குகிறார்கள்.

இந்த ரகசியம் குறித்தே இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொடர்பாக இவ்வாறு கூறினார்கள்:

மரணித்தவர் பூமியில் நடப்பதைக் காண வேண்டும் என்று எவராவது விரும்பினால், அவர் அபூபக்ரை பார்த்துக் கொள்ளட்டும். அபூபக்ரின் அந்தஸ்து வெளிப்படையான நற்செயல்களால் மட்டுமே அல்ல: அதற்கும் மேற்பட்டு

அவரது உள்ளத்தில் உள்ள அந்த விஷயத்தினால் இருக்கிறது.

ஹஸ்ரத் அபூஸயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை அன்னார், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் பயணம் மேற்கொண்டார்கள். முகாமிட்டபோது, ஒருவர் ஒருவருடன் ஒருவர் வேறொருவருடன் என, பல கூட்டங்களாகப் பிரிந்துவிட்டார்கள் .ஹஸ்ரத் அபூஸயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அருகில் முகாமிட்டேன். எங்களுடன் காட்டுவாசிகளைச் சேர்ந்த ஒரு கிராமப்புற மனிதரும் இருந்தார். காட்டுவாசிகளில் எவருடைய வீட்டில் நாங்கள் தங்கியிருந்தோமோ அவர்களின் வீட்டுப் பெண் ஒருவர் கருவுற்றிருந்தார். அந்தக் காட்டரபி அந்தப் பெண்ணிடம்,உங்கள் வீட்டில் ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாயா? நீ எனக்கு ஓர் ஆட்டைக் கொடுத்தால், உங்கள் வீட்டில் ஆண் குழந்தை பிறக்கும் என்று கூறினார்.

அந்தப் பெண் அவருக்கு ஆட்டைக் கொடுத்துவிட்டார். அந்தக் காட்டரபி ஒரே ஓசையில் வரும் ஒத்த கவிதைகள் பலவற்றை அவளுக்கு முன் பாடினார்.

தனது மந்திரம் எதையோ அவளுக்கு முன் கூறியிருந்தார்.

பின்னர், அவர் ஆட்டை அறுத்தார். மக்கள் சாப்பிட உட்கார்ந்தபோது ஒரு மனிதர் இந்த ஆடு எப்படி வந்தது? என்று உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார்.பிறகு,அவர் அந்த நபரின் முழு சம்பவத்தையும் கூறினார். அதாவது, அந்தப் பெண்ணிடம் உங்கள் வீட்டில் ஆண் குழந்தை பிறக்கும். அதற்காக நான் துஆ செய்வேன் என்று கூறி அவர் ஆட்டை பெற்றதை எடுத்துரைத்தார்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் கண்டேன். அன்னாரும் அங்கு உணவு உண்ணக்கூடியவர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் அதை முற்றிலும் வெறுத்தவாறு தம்முடைய தொண்டையில் விரல்களை விட்டு அதை வெளியே எடுத்துக் கொண்டிருந்தார்கள். அதாவது, வாந்தி எடுத்து வெளியேற்றிக் கொண்டிருந்தார்கள். இணை வைத்தலுக்கு வழிவகுத்த உணவை என்னால் சாப்பிட முடியாது என்று அவ்வாறு செய்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய அடிமை ஒருவர் இருந்தார். அவர் சம்பாதித்து அன்னாருக்கு ஏதாவது கொண்டு வந்து தருவார். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர் சம்பாதித்து கொண்டு வருவதிலிருந்து உண்டு வந்தார்கள். ஒருநாள் அவர் ஒரு பொருளைக் கொண்டு வந்தார். அதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உண்டார்கள். அடிமை அன்னாரிடம், இது என்ன என்று தங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், இது என்ன? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் கூறினார்: நான் அறிவீன காலத்தில் ஒரு நபருக்கு குறி கூறினேன். எனக்கு நன்றாகக் குறி சொல்லத் தெரியாது. நான் அந்த நபரை ஏமாற்றினேன். அவர் என்னை சந்தித்தபோது, அவர் அதற்கு பகரமாக எனக்கு ஒன்றைக் கொடுத்தார். ஆக, அதைத் தான் தாங்கள் உண்டீர்கள்.

அவர் சிலவேளை அன்பளிப்பு கொண்டு வருவார் அல்லது சமைத்து பொருளைக் கொண்டு வருவார்.

ஆக, அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது விரலைத் தொண்டையில் விட்டு வயிற்றில் இருந்த அனைத்தையும் வாந்தி எடுத்து விட்டார்கள். இத்தகைய ஹராமான உணவை என்னால் சாப்பிட முடியாது என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவர் ஆணவத்தினால் தன்னுடைய ஆடையை இழுத்துக் கொண்டு நடப்பாரோ மறுமை நாள் அன்று அல்லாஹ் அவரை ஏரெடுத்தும் பார்க்க மாட்டான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் பார்த்து கவனித்தால் தவிர, மற்றபடி என்னுடைய ஆடை ஒருபுறம் தளர்வாகத் தான் இருக்கிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீர்! ஆணவத்துடன் அவ்வாறு செய்வதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவருடைய கீழாடை கீழே தொங்குமோ அவர் நரகத்துக்கு செல்வார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதைக் கேட்டு அழத் தொடங்கினார்கள். ஏனெனில், அவர்களுடைய கீழாடையும் அவ்வாறுதான் இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீர் அவர்களைச் சேர்ந்தவர் அல்ல.

சுருக்கமாக, எண்ணத்திற்குப் பெரும் பங்கு உள்ளது.

பின்னர், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுதல், கீழ்படிதல், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீதான நேசம் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக தன்மான உணர்வு கொள்ளுதல் ஆகியவை பற்றிய குறிப்பு உள்ளது. ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் வீட்டில் ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுதே, அன்னாரின் தந்தை அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். இந்த நிலையைக் கண்டு அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நீ இறைவனுடைய நபிக்கு முன்னால் இப்படி பேசுகிறாயா? என்று தம்முடைய மகளை அடிக்கச் சென்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதைக் கண்டதும் தந்தை மகள் இருவருக்கும் இடையில் வந்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து வெளிப்பட இருந்த சாத்தியமான தண்டணையிலிருந்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைக் காப்பாற்றி விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சென்ற பிறகு,ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், இன்று நான் உங்களை உங்கள் தந்தையிடமிருந்து எவ்வாறு காப்பாற்றினேன் என்று பார்த்தீர்களா? என்று நகைச்சுவையாகக் கூறினார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீண்டும் வந்தபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் சிரித்து மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், பாருங்கள்! நீங்கள் உங்களுடைய சண்டையில் என்னை இணைத்துக் கொண்டீர்கள். இப்பொழுது மகிழ்ச்சியலும் இணைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நாங்கள் இணைத்துக் கொண்டோம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உக்பா பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்தேன். அன்னார் ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்களை தூக்கியவாறு இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்: உங்கள் மீது என் தந்தை அர்ப்பணமாகட்டும்! இவரோ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஜாடையில் அல்லவா இருக்கின்றார். அலீ அவர்களின் ஜாடையில் அல்ல.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அதைக் கேட்டு சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுடைய மகள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபிகளை சேர்ந்த ஹஸ்ரத் கனீஸ் பின் ஹுஸாஃபா (ரலி) அவர்கள் மரணமடைந்ததால் விதவையானார்கள். அன்னார் பத்ர் போரில் கலந்து கொண்டிருந்தார்கள். மதீனாவில் அன்னார் (ரலி) மரணமடைந்தார்கள். ஆக, ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்:

நான் உஸ்மான் பின் அஃப்பானை சந்தித்தேன். அவரிடம் ஹஃப்ஸாவை பற்றி கூறி, நீங்கள் விரும்பினால் ஹஃப்ஸாவைத் தங்களுக்கு மணமுடித்து தருவேன் என்று கூறினேன். அன்னார் இந்த விஷயத்தைப் பற்றி நான் சற்று சிந்திக்க வேண்டும் என்றார்கள். ஆக, நான் பல நாட்கள் காத்திருந்தேன். பிறகு, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் இந்த நாட்களில் திருமணம் செய்யாமல் இருப்பதே சரியாகும் என்று நான் நினைக்கிறேன்.

ஹஸ்ரத் உமர் (ரலி) கூறுகிறார்கள்:

பிறகு, நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை சந்தித்தேன். நீங்கள் விரும்பினால் ஹஃப்ஸாவை நான் உங்களுக்கு மணமுடித்து தருகிறேன் என்று கூறினேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மௌனமாகிவிட்டார்கள். எனக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) கூறுகிறார்கள்: நான் உஸ்மானை விட அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அதிக கவலைக்குள்ளானேன். பிறகு, நான் சில இரவுகள் காத்திருந்தேன். அதற்கு பிறகு,ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஃப்ஸாவுடன் திருமணத்ததிற்கான தூது அனுப்பினார்கள். நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தேன்.

பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னை சந்தித்தார்கள். நீங்கள் ஹஃப்ஸாவைப் பற்றி கூறியபோது, நான் எந்த பதிலும் தரவில்லை என என் மீது கோபத்தில் உள்ளீர்களா? என்று கேட்டார்கள். ஆமாம். அவ்வாறே! என்று கூறினேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

உண்மையில் விஷயம் என்னவெனில், நீங்கள் முன் வைத்த போது, நான் அது தொடர்பாக பதில் அளிப்பதை விட்டும் இந்த விஷயம் தவிர வேறு எதுவும் என்னைத் தடுக்கவில்லை. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஹஃப்ஸாவைத் திருமணம் செய்ய விரும்புகிறார்கள் என்பது எனக்கு தெரிந்து இருந்தது.

மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த விருப்பத்தை நான் வெளிப்படுத்தக் கூடியவனாக இருக்கவில்லை. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு விரும்புகிறார்கள் என்று நான் உங்களிடம் கூறக்கூடியவன் அல்ல. ஆகையால்,தான் நான் மௌனம் காத்தேன் அல்லது நிராகரித்தேன். ஒருவேளை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த வரனை விட்டிருந்தார்கள் என்றால், நான் கண்டிப்பாக தங்களுடைய இந்த மகளின் வரனை ஏற்றுக் கொண்டிருப்பேன்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் புகழ்ந்து கூறியது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களுக்காக துஆ செய்து கொண்டிருந்த அந்த மக்களுடன் நின்று கொண்டிருந்தேன். அப்போது அவர்கள் மரக்கட்டிலில் வைக்கப்பட்டு விட்டார்கள்.

இதற்குள் நான் பார்க்கிறேன்! ஒருவர் எனக்குப் பின்னாலிருந்து வந்து தனது கை முட்டியை எனது தோளில் வைத்துவிட்டார். அவர் கூறினார்:

அல்லாஹ் உங்கள் மீது கருணை புரிவானாக! அல்லாஹ் உங்களையும், எங்களது இரு தோழர்களுக்குப் பக்கத்திலேயே நல்லடக்கம் செய்வான் என்று நான் நம்புகிறேன். ஏனெனில், நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டிருக்கின்றேன்:

நானும் அபூக்ரும், உமரும், இன்ன இடத்தில் இருந்தோம். நானும் அபூபக்ரும் உமரும் இதை செய்தோம். நானும், அபூபக்ரும், உமரும் சென்றுவிட்டோம்.

எனவே, அல்லாஹ் உங்களையும் இவர்கள் இருவருக்கு அருகிலேயே வைப்பான் என்று எனக்கு நம்பிக்கை இருந்தது.

(இப்னு அப்பாஸ் (ரலி) கூறுகிறார்கள்:) நான் திரும்பிப் பார்த்தபோது, ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் இருந்தார்கள்.

மற்றவை இனி வருங்காலங்களில் எடுத்துரைக்கப்படும். இன்ஷாஅல்லாஹ்.

தமிழாக்கம் :

மவ்லவி அதாவுல் முக்னீ

* * * * *

## மல்ஃபூஸாத் - முதல் பக்கத் தொடர்ச்சி...

உள்ள இரண்டு ஸபர்களின் ரகசியம் என்னவென்றால், மஹ்தியின் அழுத்தம் முழுமையானதாகும். ஏனெனில், அவரது பணி நன்மையை உருவாக்குவது ஆகும், நன்மையை உருவாக்குவது என்பது தீமையை ஒழிப்பதுடன் ஒப்பிடும்போது முழுமையான விஷயம் ஆகும். ஒரு நபர், ஒருவரின் வழியிலிருந்து முட்களை மட்டும் அகற்றினால், அது நிச்சயமாக பெரும் பணியாகும். ஆயினும், எவர் அந்த நபரை சவாரியில் அழைத்துக் கொண்டு தமது வீட்டிற்கு சென்று அவருக்கு உணவளித்தால் (முட்களை அகற்றுகின்ற) அந்தப் பணியை விட இது மிகப் பெரியதாகும். எனவே, மஹ்தியின் பணி முழுமையானதாகும். ஏனெனில், அவர் கலீஃபத்துல்லாஹ் (அல்லாஹ்வின் பிரதிநிதி) ஆவார். ஈஸா இப்னு மர்யம் கலீஃபத்துல்லாஹ்வான மஹ்தியிடம் பைஅத் செய்வார் என்பதில் உள்ள ரகசியம் இதுவே ஆகும். அதாவது, அவர் உள்ளபடியே இறைத் தூதர் (ஸல்) அவர்களின் நிழலாக இருப்பார். அன்னார் (ஸல்) காத்தமுல் அன்பியாவாக இருந்தார்கள். நபிமார்களில் முழுமையானவர்களாக இருந்தார்கள். எனவே அன்னாரது நிழலும் முழுமையானதாகவே இருக்கும். இவை இரண்டு நிழல் வடிவங்களாகும்.

ஆலிம்கள் எப்படிபட்ட அநீதியிழைக்கின்றனர்! அதாவது, மஹ்தி இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பண்புகளிலும், பெயரிலும் இருப்பார் என்ற ஒரு நிழல் வடிவத்தை அவர்கள் ஒப்புக் கொண்டுவிட்டார்கள். ஆனால், ஈஸா இப்னு மர்யமைக் குறித்து, அவரே வானத்தில் இருந்து இறங்கி வருவார் என்றக் கருத்தையே முன் வைக்கின்றனர். இது எவ்வளவு விநோதமான விஷயமாகும். அதாவது, அவர்களின் எண்ணங்கள் தடுமாற்றம் அடைந்துவிட்டன. அவை குறைகளை உருவாக்குகின்றன. மேலும், அவர்கள் அதனை புரிவதில்லை. ஒரு பக்கம், அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிழலை ஒப்புக் கொள்கின்றனர். அன்னாரின் பிரதிநிதி கலீஃபத்துல்லாஹ் ஆகிவிட்டார். ஆனால், பின்னர் சிறியவராக இருந்தவருக்கு ஏன் சுயமே வர நேரிடுகிறது? நன்மையின் பங்கு வழங்கப்பட்ட மற்றும் முழுமையானவரான மஹ்தியே அவரது நிழலாக (அதாவது மஸீஹின் நிழலாக) தோன்றியிருக்கலாமே. அவரிடம் பைஅத் செய்வதற்காகவே மஸீஹ் இப்னு மர்யமை ஏன் இறக்க வேண்டும்?

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 407, காதியான் பதிப்பு 2018)

* * * * *

## தஃப்ஸீரே கபீர் - முதல் பக்கத் தொடர்ச்சி...

தொடர்பாக வருகிறது: கியாமத் நாளன்று வெளிப்படையில் ஸஹாபியாக தென்படக்கூடிய சில மக்கள் நரகத்திற்கு செல்வதை பார்ப்பார்கள். அப்போது أُصَيْحَابِي أُصَيْحَابِي (எனது ஸஹாபி, எனது ஸஹாபி) என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுவார்கள்.

(புகாரி, தொகுதி 3, கிதாபுத் தஃப்ஸீர் பாப் وَكُنتُ عَلَيْهِمْ شَهِيدًا )

எனவே, இந்த வேதனையிலிருந்து காப்பாற்றுவதற்காக அல்லாஹ் நல்லடியார்களுடன் நல்லமுறையில் நடக்கின்றான். உதாரணமாக, அல்லாஹ் கூறுகின்றான்: أَلْحَقْنَا بِهِمْ ذُرِّيَّتَهُمْ பொருள்: நம்பிக்கையாளர்களின் பிள்ளைகள் நம்பிக்கையாளர்கள் என்றால், பின்னர் நாம் அவர்களை சுவர்க்கத்தில் அவர்களுடன் சேர்த்துவிடுவோம். பிள்ளைகளின் அந்தஸ்து எவ்வளவு குறைவானதாக இருந்தாலும் சரியே! எனவே நபிமார்கள், நல்லடியார்களின் சமுதாயங்கள் மற்றும் கூட்டத்தினர்களுக்கு திருக்குர்ஆனில், மீண்டும் மீண்டும் வாக்குறுதிகள் உள்ளன. அதாவது, அவர்கள் மீது சிறப்பான அருள் இருக்கும். அவர்கள் வேதனையடைவதால் நபிமார்கள் மற்றும் நல்லடியார்களுக்கு வேதனை ஏற்படக்கூடாது என்பதற்காக இறைவன் அவ்வாறு செய்கின்றான்.

எல்லா சமுதாயங்களிடமும் நபிமார்கள் வந்துள்ளனர் என்று திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகின்றது. எனவே முழு உலகமும் இந்த அருளில் பங்கு பெறக்கூடியதாக உள்ளது. மேலும் யூதர்களுக்கு மட்டும் அதில் எந்த சிறப்புத்தன்மையும் இல்லை.

ثُمَّ إِنَّ رَبَّكَ لِلَّذِينَ عَمِلُوا السُّوءَ بِجَهَالَةٍ :அறிவீனம் ஞானத்திற்கு எதிரான சொல் ஆகும். அதன் பொருள், அறியாமை ஆகும். அகராதியில் اَلْجَهَالَةُ ضِدُّ الْعِلْمِ என்று வருகிறது. அதேபோன்று இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: اَلْجَهَالَةُ ضِدُّ الْعِلْمِ وَالْمَعْرِفَةِ அதாவது அறிவீனம் ஞானத்திற்கு எதிர்பதம் ஆகும். மேலும் அறிவீனத்தின் பொருள் அறிவின்மை மற்றும் ஞானமின்மை ஆகும். இந்த இடத்தில் அறிவின்மை என்ற பொருளில் வரவில்லை. ஏனெனில், எவருக்கு அறிவில்லையோ அவருக்கு தண்டனை கிடைப்பதில்லை. எனவே, இங்கு ஞானமின்மை என்ற பொருளில் வந்துள்ளது. அதாவது, கட்டளைக்கான அறிவு இருந்தது. ஆயினும், தக்வாவின் குறைபாட்டின் காரணமாக அந்த நபரால் தனது நஃப்ஸை கட்டுப்பாட்டில் வைக்க முடியவில்லை. அதுபோன்ற நபர் தண்டனைக்குரியவர் ஆவார். ஏனெனில், அறிவு படைத்திருந்தபோதிலும், தக்வாவைப் பெறுவதற்கு முயற்சி செய்யாதது அறிந்தே செய்கின்ற ஒரு பாவம் ஆகும்.

உண்மையில், இறை ஞானமே மனிதனை பாவத்திலிருந்து காப்பாற்றுகின்றது. எந்த மக்கள் வெளிப்படையான கல்வியை போதுமானதாகக் கருதுகின்றார்களோ, அவர்கள் இறுதியில் பாவத்தில் ஈடுபட்டே தீருவர். எனவே, மனிதன் இறைஞானம் மற்றும் இறையச்சத்தில் முன்னேற்றம் அடைவதற்கு எப்போதும் முயற்சி செய்ய வேண்டும்.

அறிவீனம் இரு வகைப்படும் என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். ஒன்று, நிரந்தரமானது. இதற்கு இரையானவர் இறைஞானத்திலிருந்து முற்றிலும் இழப்பிற்குரியவராக இருக்கின்றார். மேலும், பாவத்திலேயே அவருக்கு எல்லா இன்பமும் கிடைக்கின்றது.

இரண்டாவது வகை தற்காலிகமானது. இதற்கு ஓர் சிறிய இறைஞானம் பெற்றவர் கூட இரையாகிவிடுகின்றார். ஏனெனில், சிலநேரம் அவரது இறைஞானத்தின் படித்தரம் குறைவாக இருக்கின்றது. எனவே, அப்போது அவர் மனஉணர்ச்சிகளுக்கு இரையாகிவிடுகின்றார். ஆக, ஹதீஸிலும் இவ்வாறு வருகிறது: لَا يَزْنِي الزَّانِي حِينَ يَزْنِي وَهُوَ مُؤْمِنٌ فَيَخْرُجُ مِنْهُ الْإِيمَانُ فَيَصِيرُ عَلَى رَأْسِهِ كَالظُّلَّةِ

பொருள் : விபச்சாரன் விபச்சாரம் செய்து கொண்டிருக்கும்போது அந்நேரத்தில் அவனது உள்ளத்து நிலை ஈமான் கொண்ட நிலையில் இருப்பதில்லை. மேலும், அவரது ஈமான் அவரது உள்ளத்திலிருந்து வெளியேறி அவரது தலையில் குடையைப் போன்று சுழன்று கொண்டிருக்கும். (திர்மதி, அப்வாபுல் ஈமான்)

وَأَصْلَحُوا என்பதற்கு உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள் அல்லது மற்றவர்களை சீர்திருத்துங்கள் என்ற இரண்டு பொருளும் கொடுக்க முடியும். இதில் இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது. அதாவது பாவத்திற்குப் பிறகு, மனிதன் வெறும் உள்ளத்தின் அளவில் மட்டுமே தவ்பா செய்தல் கூடாது. மாறாக, எந்த காரணங்களினால் அவரிடம் பாவம் வெளிப்பட்டதோ, அவற்றையும் அகற்ற வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் பாவம் வெளிப்படாது.

மற்றவர்களை சீர்திருத்துங்கள் என்பது இந்த விஷயத்தை சுட்டிக் காட்டுகின்றது. அதாவது, தமது பாவத்திற்கான பரிகாரமாக அவர் மற்ற மக்களின் சீர்திருத்தத்திற்காக முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் எவர்களை நேர்வழியின் பக்கம் கொண்டு வந்தார்களோ அவர்களுக்கான நற்கூலியில் அவரும் இணைந்து கொள்ளமுடியும். மேலும் முந்தைய பாவங்களின் காரணமாக நற்செயல்களில் ஏற்பட்ட குறைவும் பூர்த்தியாகிவிடும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 267 காதியான் பதிப்பு 2010)

* * * * *

## 12-ம் பக்கத் தொடர்ச்சி

வழிகளையும், வழிமுறைகளையும் நீங்கள் தேட வேண்டும்.

பின்னர், ஹுஸூர் ஜுமுஆவில் அத்ஃபால் மற்றும் காதிம்களின் வருகை மிகவும் குறைவாக உள்ளது. அதற்கான காரணம் பள்ளிக்கு செல்வதாகும் என்று ஆமிலாவின் ஓர் உறுப்பினர் கூறினார்.

அதற்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

இந்த பிரச்சனை எல்லா இடத்திலும் உள்ளது. அவர்கள் பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது அவர்களால் ஜுமுஆ தொழமுடியாது. ஆயினும், விடுமுறை நாட்களில் அவர்கள் ஜுமுஆ தொழவேண்டும். இது நடைமுறையில் உள்ள உண்மையான ஒரு விவகாரம் ஆகும். எனவே, **பள்ளிக் கூடத்தில் சில அத்ஃபால் மற்றும் காதிம்கள் ஒன்றுகூடி ஜுமுஆ தொழமுடியுமென்றால் தொழுவதற்கு முயற்சி செய்யட்டும். அதற்கு அனுமதி இருந்தால் அவ்வாறு செய்யட்டும் அல்லது பள்ளிக்கூடத்தை தொடர்பு கொண்டு இதற்கு கோரிக்கை வைக்கவும்.** அதாவது, இந்த அத்ஃபால் அல்லது காதிம்கள் தமக்கு அருகில் உள்ள மஸ்ஜிதிற்கு சென்று ஜுமுஆ தொழுது கொள்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு சிறிது நேரம் ஒதுக்க முடியுமா அல்லது சிறிது இடைவேளை விடமுடியுமா? என்று கேளுங்கள்.

சூழ்நிலைகளை ஆய்வு செய்து அவர்களுக்காக நீங்கள் என்ன செய்ய முடியும்? என்று பாருங்கள். பள்ளிக்கூடத்திலிருந்து வருவதற்கும், திரும்பி கொண்டு விடுவதற்கும் ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா? என்று பாருங்கள். அவர்கள் ஜுமுஆ தொழுவதற்கு ஏதுவாக அவர்கள் 12 மணிக்குப் பிறகு பள்ளிக் கூடத்திலிருந்து செல்வதற்கு விடுப்பு வழங்க பள்ளிக்கூட நிர்வாகம் சம்மதித்துவிட்டால் அதற்கான ஏற்பாடு செய்யுங்கள்.

ஜுமுஆ நாளன்று அரை நாள் விடுமுறை வழங்குவதற்கு பள்ளிக் கூட நிர்வாகம் தயாராகிவிட்டால், பிள்ளைகளை பள்ளிக்கூடத்திலிருந்து அழைத்து வருவதற்கும், குறித்த நேரத்தில் ஜுமுஆவை நிறைவேற்றுவதற்கும் ஏற்பாடுகள் செய்வது பெற்றோரின் கடமையும் ஆகும்.

முதலில் பள்ளிக்கூட நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்துங்கள். அதில் பெற்றோர்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், பெற்றோர்கள் உங்களுடன் நிற்காத வரை ஜுமுஆ நாளன்று அரை நாள் விடுப்புவிடுவதற்கோ அல்லது இடைவேளை வழங்குவதற்கோ பேசுவதற்கு நீங்கள் யார்? என பள்ளிக்கூட நிர்வாகம் உங்களிடம் கேள்வி எழுப்பக்கூடும். எனவே, ஜமாஅத்தின் தர்பிய்யத் செயலர், லஜ்னாவின் தர்பிய்யத் செயலர், முஃதமிம் தர்பிய்யத் மற்றும் முஃதமிம் அத்ஃபால் ஆகியோர் ஒன்றாக இணைந்து நாம் எவ்வாறு இந்த சிக்கலைத் தீர்ப்பது என்று ஒரு முழுமையான நிகழ்ச்சியை வடிவமையுங்கள். பள்ளிக் கூட நிர்வாகம் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி, இடைவேளை விடுவதற்கு தயாராகிவிட்டால் நல்ல விஷயம். இல்லையென்றால், அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. **குறைந்தபட்சம் விடுமுறை நாட்களில் ஒவ்வொரு திஃப்லும் நிச்சயம் ஜுமுஆ தொழுகையை நிறைவேற்ற வேண்டும் திஃப்ல்களுக்கு நீங்கள் முழுமையான கவனமூட்ட வேண்டும்.**

( நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, அக்டோபர் 05. 2021 )

* * * * *


**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732



**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 20 October 2022 Issue No. 42

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**பிள்ளைகள் 14, 15 வயதை அடையும்போது பொதுவாக அவர்களின் முன்னுரிமைகள் மாறிவிடுகின்றன.**

**மார்க்க மற்றும் ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளில் (பங்கெடுப்பதில்) சோம்பலை வெளிப்படுத்துகின்றனர்.**

**இது மிகவும் நுட்பமான தருணமாகும். இது எப்படிபட்ட பருவம் என்றால், இதில் நீங்கள் அவர்களை உங்களுக்கு அருகில் வைக்க வேண்டும். அவர்களை மார்க்கத்துடன் இணைத்து வைக்க வேண்டும். ஜமாஅத் செயல்பாடுகளில் அவர்களை மும்முரமாக வைக்க வேண்டும்.**

## ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மொரிசீயஸின் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் காயித் மார்களின் ஆன்லைன் சந்திப்பு:

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் பிப்ரவரி 27, 2021 அன்று ஆன்லைன் சந்திப்பு நிகழ்த்துவதற்கு மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மொரிசீயஸின் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் காயித் மார்களுக்கு கண்ணியம் கிடைத்தது. ஹுஸூர் அன்வர் அவர்கள் இந்த சந்திப்பிற்காக (டில்ஃபோர்ட்) இஸ்லாமாபாத்தில் தமது அலுவலகத்தில் வருகை தந்திருந்தார்கள். அதேநேரம் செயற்குழு உறுப்பினர்கள் Rose Hill (அஹ்மதிய்யா ஜமாஅத், மொரிசீயஸின் தலைமையகம்) தாருஸ் ஸலாம் மஸ்ஜிதிலிருந்து இந்த ஆன்லைன் சந்திப்பில் கலந்து கொண்டார்கள். 60 நிமிடங்கள் கொண்ட இந்த சந்திப்பு திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. அதன் பிறகு, அனைத்து ஆமிலா உறுப்பினர்களுக்கும் தத்தமது துறைகளின் அறிக்கைகளை சமர்ப்பித்து, எதிர்காலத்திற்காக திட்டமிடப்பட்டுள்ள திட்டங்களை எடுத்துரைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

தர்பிய்யத் செயலருக்கு இளைஞர்களுக்கான இஸ்லாமிய அடிப்படை அடையாளங்களின் முக்கியத்துவத்தின் பக்கம் கவனமூட்டியவாறு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

இளைஞர்களுக்கு தொழுகையின் முக்கியத்துவத்தைக் குறித்து கூறுங்கள். முஸ்லிம்களின் மீது கடமையான ஐவேளை தொழுகைகளைக் குறித்து கூறுங்கள். அதன் முக்கியத்துவத்தை திருக்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள், ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேற்கோள்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள். மேலும், அது தொடர்பான அஹ்மதிய்யா கலீஃபாக்கள் வழங்கியுள்ள வழிகாட்டல்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள். வெறும் ஒரு தர்பிய்யத் வாரம் கொண்டாடிவிடுவதால் மட்டும் எந்த சிறப்பான வித்தியாசமும் ஏற்பட்டுவிடாது. அந்த இளைஞர்கள் சில நாட்கள் தொழுவார்கள். பின்னர், பழைய நிலைக்கு திரும்பிவிடுவார்கள்.

ஒவ்வொரு காதிமிற்கும், தனிப்பட்ட முறையில் தொழுகையின் முக்கியத்துவம் குறித்த ஞானம் இருக்க வேண்டும். இந்த அடிப்படையில் ஆமிலா உறுப்பினர்கள் தமது முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும். நீங்கள் உங்களது முன்மாதிரியைக் காட்டாதவரை மக்கள் உங்கள் வழிகாட்டல்களின்படி செயல்பட மாட்டார்கள்.

இந்த சந்திப்பின்போது, ஹுஸூர் அன்வர் அவர்கள் மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் மிஃயாரே கபீர் (உயர் குழு) திஃபல்களுக்கு சரியான வழிமுறையில் தர்பிய்யத் வழங்குவதற்கு அதிக அழுத்தம் கொடுத்தார்கள். அவர்களின் நல்லொழுக்க மற்றும் ஆன்மீக தரம் தொடர்பான தனது எதிர்பார்ப்புகளை ஹுஸூர் அன்வர் அவர்கள் முஃதமிம் அத்ஃபால் செயலரிடம் இவ்வாறு வெளிப்படுத்தினார்கள்.

இந்த வயதில் உள்ள சிறுவர்களுக்கு நீங்கள் சிறப்பு நிகழ்ச்சிகளை வடிவமைக்க வேண்டும். ஏனெனில் பிள்ளைகள் 14, 15 வயதை அடையும்போது பொதுவாக அவர்களின் முன்னுரிமைகள் மாறிவிடுகின்றன. மார்க்க மற்றும் ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளில் (பங்கெடுப்பதில்) சோம்பலை வெளிப்படுத்துகின்றனர். அவர்களின் ஆர்வம் மற்ற விஷயங்களில் அதிகரித்து விடுகின்றது. எனவே இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் நுட்பமான பருவமாகும். மேலும், இது எப்படிபட்ட பருவம் என்றால், இதில் நீங்கள் அவர்களை உங்களுக்கு அருகில் வைக்க வேண்டும். அவர்களை எப்போதும் மார்க்கத்துடன் இணைத்து வையுங்கள். உங்களால் எந்த அளவிற்கு அவர்களை ஜமாஅத் செயல்பாடுகளில் மும்முரமாக ஈடுபட வைக்க முடியுமோ வையுங்கள்.

சந்திப்பின் இறுதியில், ஒருமுறை மீண்டும் அத்ஃபால் தொடர்பாக ஓர் உறுப்பினர் கேள்வி கேட்டார். அதற்கு, ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

திஃப்ல்களைப் பொருத்தவரை, நான் முஃதமிம் சாஹிப் அத்ஃபால் செயலரிடம் விரிவாக கூறிவிட்டேன். அதாவது, 14 முதல் 15 வயது வரையுள்ள திஃப்ல்களின் மீது சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். இது ஒரு மிகவும் முக்கியமான தருணம் ஆகும். அவர்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் நுழையும்போது, அவர்கள் தம்மை பெரியவர்களாக கருதத் தொடங்குகின்றனர். எனவே, 12 முதல் 13 வயது வரை அத்ஃபால் மற்றும் குத்தாம் நிகழ்ச்சிகளில் அவர்கள் முழுமையாக ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால், 14 வயதை அடைந்த உடன் அவர்கள் தம்மை ஜமாஅத் நிகழ்ச்சிகளிலிருந்து விலக்கிக் கொள்கின்றனர். நாம் சுயமே முடிவெடுக்க முடியும் என்று அவர்கள் தங்களை பெரியவர்களாக கருதுகின்றனர். பின்னர், அவர்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கு வந்தவுடனேயே தங்களை மிகவும் பெரியவர்களாக கருதிக் கொள்கின்றனர். மேலும், 18 வயதை அடைந்த உடனேயே தங்களை முற்றிலும் பருவமடைந்தவர்களாக கருதுகின்றனர். மேலும், அவர்கள் விரும்புவதை செய்வதற்கு சட்டமும் அவர்களை அனுமதிக்கின்றது. இந்த வயதில் உள்ள அந்த சிறுவர்களுக்காக நீங்கள் சிறப்பு நிகழ்ச்சிகளை வடிவமைக்க வேண்டும். அவர்களை ஜமாஅத்துடன் தொடர்புடையவர்களாக ஆக்க வேண்டும். அவர்களின் விருப்பத்திற்குரிய நிகழ்ச்சிகளை நீங்கள் உருவாக்க வேண்டும். அவர்களை குத்தாமுல் அஹ்மதிய்யாவின் செயல்பாடுகளில் பங்குபெறச் செய்வதற்காக பல்வேறு

இதன் தொடர்ச்சி : 11-ம் பக்கம்

National
Watch Company
Sales & Service



B. Mohamed Adil
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

O.A.N. Doors & Steels

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad